**வகுப்பு : 8-ம் வகுப்பு**

**பாடம் : தமிழ்**

**இயல் - 7**

## 1. படை வேழம்

**I. குறுவினா.**

**1. சோழ வீரர்களைக் கண்டு கலிங்கர் எவ்வாறு நடுங்கினர்?**

- சோழ வீரர்களின் தாக்குதலைக் கண்ட கலிங்கர், இஃது என்ன மாயவித்தையா என வியந்தனர்.
- தம்மை எரிக்க வந்த தீயோ என அஞ்சினர்.
- சோழர் படை தம் உயிரைப் பறிக்கம் காலனோ என அஞ்சினர்.
- தமது இறுதிக்காலம் நெருங்கிவிட்டதோ என எண்ணி அலைந்து குலைந்து நடுங்கினர்.

**2. கலிங்க வீரர்கள் எவ்வாறு அஞ்சி ஓடினர்?**

சோழப்படையின் தாக்குதலைக் கண்டு நடுங்கிய கலிங்க வீரர்கள் படை கூட்டத்திலிருந்து விலகி ஓடினர்.

சிலர், கடலில் தாவிக் குதித்துத் தப்பினர். சிலர், யானைகளின் பின்னே மறைந்து கொண்டனர். எத்திசையில் செல்வது எனத் தெரியாமல், செல்வதற்கு அரிதான மலைக் குகைகளுக்குள்ளும் புதர்களுக்குள்ளும் தப்பி ஓடினர்.

Pinkz Public School
Next Generation School

**3. சோழனின் யானைப்படையைக் கண்ட வீரர்களின் செயல்கள் யாவை?**

சோழ மன்னனின் படையிலுள்ள யானைகள் சினமுற்று இடியைப் போலப் பிளிறின. அவ்வோசையைக் கேட்டு அஞ்சிய வீரர்கள், இருள் நிறைந்த குகைக்குள் சென்று மறைந்தனர். ஏனையோர் புறமுதுகு காட்டி ஓடிப் பிழைத்தனர்.

**II. சிறுவினாக்கள்.**

**1. சோழ வீரர்களைக் கண்ட கலிங்கப்படை வீரர்களின் செயல்களாய்க் கலிங்கத்துப்பரணி கூறுவன யாவை?**

சோழர் படையின் தாக்குதலைக் கண்ட கலிங்கர், இஃது என்ன மாயவித்தையா என்று வியந்தனர்.

தம்மை எரிக்க வந்த தீயோ என அஞ்சினார் சோழர்படை தம் உயிரைப் பறிக்கும் காலனோ என அஞ்சினார்.

தமது இறுதிக்காலம் நெருங்கிவிட்டதோ என எண்ணி, மிக நடுங்கிக் கடலில் தாவிக் குதித்துத் தப்பினர். யானைகளின் பின்னே சிலர் மறைந்துகொண்டனர்.

எத்திசையில் செல்வது எனத் தெரியாமல் சிலர், மலைக் குகைகளுக்குள்ளும், புதர்களுக்குள்ளும் ஒருவரை ஒருவர் முந்திக்கொண்டு ஓடினர்.

தம் நிழலையும், மற்றவர் நிழலையும் கண்டு, தமிழர் துரத்தி வருவதாய் எண்ணி அஞ்சித் தஞ்சம் வேண்டி வணங்கினர்.

சோழர் படையின் யானைகள் சினமுற்று இடியைப் போலப் பிளிறியதைக் கேட்டு அஞ்சிய கலிங்க வீரர்கள், இருள் நிறைந்த குகைக்குள் சென்று மறைந்தனர்; மற்றவர் புறமுதுகு காட்டி ஓடிப் பிழைத்தனர்.

**III. சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.**

1. சிங்கம் ______________யில் வாழும்.

   அ. மாயை  ஆ. ஊழி  **இ. முழை**  ஈ. அலை

2. கலிங்க வீரர்களிடையே தோன்றிய உணர்வு ______________.

   அ. வீரம்  **ஆ. அச்சம்**  இ. நாணம்  ஈ. மகிழ்ச்சி

3. 'வெங்கரி' என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பன ______________.

   அ. வெம் + கரி  **ஆ. வெம்மை + கரி**

   இ. வெண் + கரி  ஈ. வெங் + கரி

4. 'என்றிருள்' என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பன ______________.

   அ. என் + இருள்  ஆ. எட்டு + இருள்

   இ. என்ற + இருள்  **ஈ. என்று + இருள்**

5. போல் + உடன்றன என்பனவற்றைச் சேர்த்தெழுதக் கிடைக்கும் சொல் ______________.

   அ. போன்றன  ஆ. போலன்றன

   **இ. போலுடன்றன**  ஈ. போல் உடன்றன

6. போர்முனையில் ஆயிரம் யானைகளைக் கொன்று வெற்றி கொண்ட வீரரைப் புகழ்ந்து பாடும் இலக்கியம் ____________.

அ. உலா **ஆ. பரணி**

இ. கலம்பகம் ஈ. பதிகம்

7. கலிங்கத்துப்பரணி ____________ தாழிசைகள் கொண்டது.

அ. 399 ஆ. 499 **இ. 599** ஈ. 699

8. 'சிதைந்தோடல்' என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பன ____________.

அ. சிதைந் + தோடல் **ஆ. சிதைந்து + ஓடல்**

இ. சிதை + ஓடல் ஈ. சிதை + தோடல்

9. கலிங்கத்துப்பரணியை ____________ என்று ஒட்டக்கூத்தர் புகழ்ந்துள்ளார்.

**தென்தமிழ்த் தெய்வப்பரணி.**

## 2. விடுதலைத் திருநாள்

### I. குறுவினா.

**1. பகத்சிங் கண்ட கனவு யாது?**

சதி வழக்கில் தூக்குத்தண்டனை விதிக்கப்பட்ட பகத்சிங், தூக்கிலிடப்படும் கடைசி நேரத்திலும், தன் மனக்கண்ணில், இந்தியாவின் விடியல் தோன்றிய விடுதலைத் திருநாளைக் கனவு கண்டார்.

**2. இருண்ட ஆட்சி என எதனை மீரா குறிப்பிடுகிறார்?**

முந்நூறு ஆண்டுகள் நம்மை அடிமைப்படுத்தி ஆண்ட அரக்கராகிய அந்நியரின் ஆட்சியே இருண்ட ஆட்சி என மீரா குறிப்பிடுகிறார்.

### II. சிறுவினா.

**1. இந்தியத்தாய் எவ்வாறு காட்சியளிக்கிறாள்?**

அந்நியரின் இருண்ட ஆட்சி முடிந்து, நாட்டுமக்களைப் பற்றியிருந்த அறியாமை என்னும் உறக்கத்தை விரட்டியடித்து இந்தியத்தாய் காட்சியளிக்கிறாள்.

அடிமையாய்த் தவித்துக்கொண்டிருந்த இந்தியத்தாய் காளியாய் சினந்து எழுந்தாள்; தன் கைவிலங்கை உடைத்துப் பகைவரை அழித்தாள்; அவிழ்த்த கூந்தலை முடித்து, நெற்றியில் விடுதலைத் திலகமிட்டு இந்தியருக்கு மகிழ்வான காட்சி தருகிறாள்.

**III. சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.**

1. வானில் முழுநிலவு அழகாய்த் ________________ அளித்தது.

அ. தயவு **ஆ. தரிசனம்** இ. துணிவு ஈ. தயக்கம்

2. இந்த ________________ முழுவதும் போற்றும்படி வாழ்வதே சிறந்த வாழ்வு.

**அ. வையம்** ஆ. வானம் இ. ஆழி ஈ. கானகம்

3. 'சீவனில்லாமல்' என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பன ________________.

அ. சீவ + நில்லாமல் ஆ. சீவன் + நில்லாமல்

**இ. சீவன் + இல்லாமல்** ஈ. சீவ + இல்லாமல்

4. 'விலங்கொடித்து' என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பன ________________.

அ. விலம் + கொடித்து ஆ. விலம் + ஒடித்து

இ. விலன் + ஒடித்து **ஈ. விலங்கு + ஒடித்து**

5. காட்டை + எரித்து என்பனவற்றைச் சேர்த்தெழுதக் கிடைக்கும் சொல் ________________.

அ. காட்டைஎரித்து **ஆ. காட்டையெரித்து**

இ. காடுஎரித்து ஈ. காடுயெரித்து

6. இதம் + தரும் என்பனவற்றைச் சேர்த்தெழுதக் கிடைக்கும் சொல் ________________.

**அ. இதந்தரும்** ஆ. இதம்தரும்

இ. இதத்தரும் ஈ. இதைத்தரும்

7. அந்நியர்கள் நம்மை அடிமைப்படுத்தி ஆண்டது ____________ ஆண்டுகள் ஆகும்.

அ. 350 ஆ. 375 **இ. 300** ஈ. 400

8. 'முற்றுகையிட்ட' என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பன ____________.

அ. முற்று + கையிட்ட **ஆ. முற்றுகை + இட்ட**

இ. முற்றுகை + யிட்ட ஈ. முற்றுகை + ஈட்ட

9. விரட்டி + அடித்து என்பனவற்றைச் சேர்த்தெழுதக் கிடைக்கும் சொல் ____________.

**அ. விரட்டியடித்து** ஆ. விரட்டி அடித்து

இ. விரட்டியாடித்து ஈ. விரட்டியொடித்து

10. 'பரிதவித்திருந்த' எனும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பன ____________.

அ. பரிதவி + திருந்த **ஆ. பரிதவித்து + இருந்த**

இ. பரிதவித் + திருந்த ஈ. பரிதவி + இருந்த

Next Generation School

## 3. பாரத ரத்னா எம்.ஜி.இராமச்சந்திரன்

### I. குறுவினா.

**1. எம்.ஜி.ஆர். நாடகத்துறையில் ஈடுபடக் காரணம் என்ன?**

எம்.ஜி.ஆர். கும்பகோணத்திலுள்ள ஆனையடிப்பள்ளியில் அண்ணன் சக்கரபாணியுடன் சேர்ந்து கல்வி பயின்றார்.

வறுமை காரணமாய்ப் படிப்பைத் தொடர முடியாமல் உடன்பிறந்தார் இருவரும் நாடகத்துறையில் ஈடுபட்டு நடிகர்களாயினர்.

**2. திரைத்துறையில் எம்.ஜி.ஆரின் பன்முகத் திறமைகள் யாவை?**

- திரைத்துறையில் தனிச்சிறப்பான நடிப்பு, சுறுசுறுப்பான சண்டைக் காட்சிகள் மூலம் திரை உலகில் தமக்கெனத் தனி இடத்தை உருவாக்கி, உச்சம் தொட்டார், எம்.ஜி.ஆர்.
- தம் படப்பாடல்கள் எவ்வாறு அமைய வேண்டும் என்பதைப் பாடலாசிரியர்களுக்கு உணர்த்தி இவர் எழுத வைத்தார்.
- திரைத்துறையில் நடிகர், தயாரிப்பாளர், இயக்குநர் எனப் பன்முகத்திறமை கொண்டு எம்.ஜி.ஆர். விளங்கினார்.

**3. எம்.ஜி.ஆரின் சமூக நலத்திட்டங்களுள் நான்கனை எழுதுக.**

1. ஏழைகளுக்கான வீட்டுவசதித் திட்டம்.
2. ஆதரவற்ற மகளிருக்குத் திருமண உதவித்திட்டம்.
3. நலிவடைந்த பிரிவைச் சேர்ந்த மாணவர்களுக்குப் பாடநூல் வழங்கும் திட்டம்.
4. முதியோருக்கு உதவித்தொகை வழங்கும் திட்டம்.

Next Generation School

**II. சிறுவினா.**

**1. பள்ளிக் குழந்தைகளுக்குக் காலணி வழங்கும் திட்டத்துக்கு அடிப்படையாய் அமைந்த நிகழ்வை எழுதுக.**

எம்.ஜி.ஆர். ஒரு முறை வெளியூரிலிருந்து மகிழ்வுந்தில் சென்னைக்கு வந்து கொண்டிருந்தார். வழியில் மூதாட்டி ஒருவரும் பத்துவயதுச் சிறுமி ஒருத்தியும் தலையில் புல்கட்டுகளைச் சுமந்தவாறு கால்களில் காலணி இல்லாமல் சென்றுகொண்டிருந்தனர்.

சாலையின் சூட்டினைப் பொறுக்க முடியாமல் அவர்கள் சாலையோர மரநிழலில் நிற்பதும் ஓடுவதுமாய் இருந்ததைக் கண்ட எம்.ஜி.ஆர். உடனே தமது மகிழ்வுந்தை நிறுத்தச் செய்தார்.

உடன்வந்த தமது துணைவியாரது காலணியையும், உறவினரான பெண்ணின் காலணியையும் அவர்களிடம் கொடுக்கச் செய்தார்.

**2. தமிழ்மொழியின் வளர்ச்சிக்காக எம்.ஜி.ஆர். ஆற்றிய பணிகள் யாவை?**

எம்.ஜி.ஆர். தமிழ் வளர்ச்சிக்காகப் பல்வேறு பணிகளை ஆற்றினார்; தந்தை பெரியார் உருவாக்கிய எழுத்துச் சீர்த்திருத்தங்களுள் சிலவற்றை நடைமுறைப்படுத்தித் தமிழ் எழுத்து முறையை எளிமைப்படுத்தினார் மதுரை மாநகரில் ஐந்தாம் உலகத் தமிழ் மாநாட்டைச் சிறப்பாய் நடத்தினார் தஞ்சையில் ஆயிரம் ஏக்கர் பரப்பளவில் தமிழ்ப் பல்கலைக் கழகத்தைத் தோற்றுவித்தார்.

Next Generation School

**III. சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.**

1. எம்.ஜி.ஆர் ________________ என்னும் ஊரில் கல்வி பயின்றார்.

அ. கண்டி **ஆ. கும்பகோணம்**

இ. சென்னை ஈ. மதுரை

2. எம்.ஜி.ஆர். படிப்பைத் தொடர முடியாமைக்குக் காரணம் _____.

அ. நடிப்பு ஆர்வம் ஆ. பள்ளி இல்லாமை

**இ. குடும்ப வறுமை** ஈ. படிப்பில் ஆர்வமில்லாமை

3. இந்திய அரசு சிறந்த நடிகருக்கான _________ எனும் பட்டத்தை எம்.ஜி.ஆருக்கு வழங்கியது.

அ. புரட்சித்தலைவர் **ஆ. பாரத்**

இ. பாரத மாமணி ஈ. புரட்சி நடிகர்

4. ஐந்தாம் உலகத் தமிழ்மாநாடு நடைபெற்ற இடம் ____________.

அ. திருச்சி ஆ. சென்னை **இ. மதுரை** ஈ. கோவை

5. எம்.ஜி.ஆருக்கு அழியாத புகழைத் தேடித் தந்த திட்டம் ______.

**அ. மதிய உணவுத்திட்டம்** ஆ. வீட்டு வசதித் திட்டம்

இ. மகளிர் நலன் திட்டம் ஈ. இலவசக் காலணித் திட்டம்

6. சென்னை பல்கலைக்கழகம் எம்.ஜி.ஆரின் பணிகளைப் பாராட்டி __________________ பட்டம் வழங்கியது.

அ. பாரத் **ஆ. டாக்டர்**

இ. பாரத ரத்னா ஈ. இதயக்கனி

**கோடிட்ட இடத்தை நிரப்புக.**

7. கலைத்துறையின் முடிசூடா மன்னராய்த் திகழ்ந்தவர் ___________.

**எம்.ஜி.இராமச்சந்திரன்**

8. சென்னையிலும் மதுரையிலும் பேருந்து நிலையங்களுக்கு ________ பெயர் சூட்டப்பட்டுள்ளது.

**எம்.ஜி.ஆர்.**

9. எம்.ஜி.ஆரின் மக்கள் பணிகளைப் பாராட்டி இந்திய அரசு, மிக உயரிய ____________ விருதினை வழங்கிப் பெருமைப்படுத்தியது.

**பாரத ரத்னா.**

# 4. அறிவுசால் ஔவையார்

**I. சங்ககாலப் பெண்புலவர்களின் பெயர்களைத் தொகுத்து எழுதுக.**

1. ஔவையார்
2. நன்முல்லையார்
3. ஆதிமந்தி
4. ஒக்கூர் மாசாத்தியார்
5. காக்கைப்பாடினியார்
6. நச்செள்ளையார்
7. நப்பசலையார்
8. நக்கண்ணையார்
9. பொன்முடியார்
10. முடத்தாமக்கண்ணியார்
11. வெள்ளவீதியார்
12. வெண்ணிக்குயத்தியார்

## 5. வல்லினம் மிகும் இடங்களும் மிகா இடங்களும்

**I. சிறுவினா.**

**1. சந்திப்பிழை என்றால் என்ன?**

வல்லினம் மிக வேண்டிய இடத்தில் மிகாமல் எழுதுவதும், மிகக்கூடாத இடத்தில் வல்லினமெய் இட்டு எழுதுவதும் தவறாகும். இதனைச் சந்திப்பிழை அல்லது ஒற்றுப்பிழை எனக் குறிப்பிடுவர்.

**2. வேற்றுமைகளில் வல்லினம் மிகும் இடங்களை எழுதுக.**

இரண்டாம் வேற்றுமை உருபாகிய 'ஐ' வெளிப்படையாய் வருமிடத்தில் வல்லினம் மிகும்.

(எ.கா): தலையைக் காட்டு, பாடத்தைப் படி

நான்காம் வேற்றுமை உருபாகிய 'கு' வெளிப்படையாய் வருமிடத்தில் வல்லினம் மிகும்.

(எ.கா): எனக்குத் தெரியும், அவனுக்குப் பிடிக்கும்.

**3. வல்லினம் மிகாத் தொடர்கள் ஐந்தனை எழுதுக.**

1. எழுதிய பாடல்
2. இலை பறித்தேன்
3. தின்று தீர்த்தான்
4. சுடுசோறு
5. தாய்தந்தை

**III. பின்வரும் தொடர்களை வல்லினம் மிகும், மிகா இடங்கள் என வகைப்படுத்துக.**

1. சுட்டுத்திரிபு - வல்லினம் மிகும்

2. திசைப்பெயர்கள் - வல்லினம் மிகும்

3. பெயரெச்சம் - வல்லினம் மிகாது

4. உவமைத்தொகை - வல்லினம் மிகும்

5. நான்காம் வேற்றுமை விரி - வல்லினம் மிகும்

6. இரண்டாம் வேற்றுமைத்தொகை - வல்லினம் மிகாது

7. வினைத்தொகை - வல்லினம் மிகாது

8. உருவகம் - வல்லினம் மிகும்

9. எழுவாய்த்தொடர் - வல்லினம் மிகாது

10. எதிர்மறைப் பெயரெச்சம் - வல்லினம் மிகாது

**IV. பின்வரும் தொடர்களில் உள்ள பிழைகளைத் திருத்தி எழுதுக.**

1. அதைச் செய்தது நான் **அன்று.**

விடை: அதைச் செய்தது நான் **அல்லேன்.**

2. பானையை உடைத்தவன் கண்ணன் **அல்ல.**

விடை: பானையை உடைத்தவன் கண்ணன் **அல்லன்.**

3. மல்லினை, குளத்தில் பூக்கும் மலர் **அல்லை.**

விடை: மல்லிகை, குளத்தில் பூக்கும் மலர் **அன்று.**

4. சித்தர்கள் செயற்கையை விரும்பியவர்கள் **அல்லோம்.**

விடை: சித்தர்கள் செயற்கையை விரும்பியவர்கள் **அல்லர்.**

5. பகைவர் நீவீர் **அல்லர்.**

விடை: பகைவர் நீவிர் **அல்லீர்.**

Next Generation School

**V. சரியான எதிர்மறைச் சொற்களைக் கொண்டு நிரப்புக.**

1. தாங்கள் படிக்க வேண்டிய புத்தகங்கள் இவை ________.

விடை: தாங்கள் படிக்க வேண்டிய புத்தகங்கள் இவை அல்ல.

2. உங்களோடு வருவோர் ____________ அல்லோம்.

விடை: உங்களோடு வருவோர் நாம் அல்லோம்.

3. மணிமேகலை செல்வ வாழ்வை விரும்பியவன் ____________.

விடை: மணிமேகலை செல்வ வாழ்வை விரும்பியவள் அல்லள்.

4. ஈ மொய்த்த பண்டங்கள் உடலுக்கு நன்மை செய்வன _________.

விடை: ஈ மொய்த்த பண்டங்கள் உடலுக்கு நன்மை செய்வன அல்ல.

5. இந்த நிலத்துக்கு உரிமையாளன் _________________ அல்லை.

விடை: இந்த நிலத்துக்கு உரிமையாளன் நீ அல்லை.

**VI. கட்டுரை.**

**நாட்டின் வளர்ச்சியில் இளைஞர்களின் பங்கு**

முன்னுரை, சமுதாயத்தில் இளைஞர்கள், இளைஞர்களின் பங்களிப்பு, தகவல் தொழில்நுட்பப்புரட்சி, முடிவுரை.

**முன்னுரை**

ஒரு நாட்டின் வளர்ச்சிக்கு முதுகெலும்பாய் விளங்குபவர் அந்நாட்டின் இளைஞர் ஆவர். புதிய சிந்தனைகள், மேம்பட்ட திறன்கள், புதுமைகளை உள்வாங்கும் நிலை, நவீன உத்திகளைக் கையாளுதல் போன்ற எண்ணற்ற பரிமாணங்களைக் கொண்டவர்கள், இளைஞர்கள். அதனால் இளைஞர்கள்தாம் நாட்டின் எதிர்காலம்;

அவர்களின் கைகளில்தாம் நாடு உள்ளது என்று இளைஞர்களின் சக்தியை உலகிற்கு உணர்த்தினார், சுவாமி விவேகானந்தர்.

**சமுதாயத்தில் இளைஞர்கள்**

இன்றைய இளைஞர்கள் தங்களது சக்தியை நல்வழியில் பயன்படுத்தி, நாட்டின் வளர்ச்சியில் பங்கு பெற வேண்டும். தாழ்வு மனப்பான்மையைத் தகர்த்துச் சமூக அக்கறை கொண்டவர்களாய் இளைஞர்கள் மாறவேண்டும்.

பள்ளி, கல்லூரிகளில் படிக்கும் போதே தேசிய மாணவர்படை, நாட்டுநலப்பணித்திட்டம் போன்றவற்றில் ஈடுபட்டு இளைஞர்கள் சமூக அக்கறையை வளர்த்துக்கொள்ள வேண்டும்.

**இளைஞர்களின் பங்களிப்பு**

இன்றைய இளைஞர்களிடம் சாதிக்கும் உணர்வு அதிகமாய் உள்ளது. படித்து முடித்தவுடன் அயல்நாடுகளுக்குச் சென்று வேலை பார்ப்பதைவிடத் தாய்நாட்டில் வேலை பார்த்து நம் நாட்டின் தரத்தை உயர்த்த வேண்டும்.

இளைஞர்கள் தங்களது இளமைப்பருவத்தைப் பயனற்ற பொழுதுபோக்குகளிலும், அர்த்தமற்ற செயல்பாடுகளிலும் செலவிடக் கூடாது; சாதிக்க வேண்டும் என்ற துடிப்பும் துணிவும் கொண்டு செயலாற்றி, நாட்டினை வளர்ச்சிபாதையில் கொண்டுசெல்ல வேண்டும்.

Pinkz Public School Next Generation School

**தகவல் தொழில்நுட்பப்புரட்சி**

இளைஞர்கள் இன்று தகவல் தொழில்நுட்பத்துறையில் மேலோங்கி ஆற்றல் மிக்கவர்களாய்த் திகழ்கிறார்கள். நாட்டின் வளாச்சிக்குத் தடையாய் இருக்கும் தீவிரவாதப் போக்குகளை ஒடுக்குவதற்குத் தகவல் தொழில்நுட்பத்தின் உதவியோடு இளைஞர் சமுதாயம் பல நல்ல உத்திகளைக் கையாள வேண்டும்.

**முடிவுரை**

இன்றைய இளைஞர்கள் இந்தியாவை வல்லரசாய்க் கட்டியெழுப்பும் திறமை படைத்தவர்கள் ஆவர். நாட்டின் வளர்ச்சியைக் கருத்தில் கொண்டு இளைஞர்கள் தங்களின் தனித்திறன்களைப் பயன்படுத்தினால் விரைவில் நாம் வல்லரசு இந்தியாவை, வளர்ந்த இந்தியாவை உருவாக்க முடியும்.

**VII. கதை நிகழ்வுக்கேற்பச் சொற்றொடரை முறையாய் வரிசைப்படுத்துக.**

1. தொண்டைமானிடம் ஒளவை தூது போதல்.
2. தொண்டைமான் படையெடுத்து வரும் செய்தியை அதியமான் ஒளவையிடம் தெரிவித்தல்.
3. தொண்டைமான் ஒளவைக்குத் தன் படைக்கருவிகளைக் காட்டுதல்.
4. அதியமான் ஒளவைக்கு நெல்லிக்கனி வழங்குதல்.
5. போர் வேண்டா என்று தொண்டைமான் முடிவு செய்தல்.
6. அதியமானின் படைச்சிறப்பைத் தொண்டைமானிடம் ஒளவை குறிப்பால் உணர்த்துதல்.

**விடை:**

1. அதியமான் ஔவைக்கு நெல்லிக்கனி வழங்குதல்.
2. தொண்டைமான் படையெடுத்து வரும் செய்தியை அதியமான் ஔவையிடம் தெரிவித்தல்.
3. தொண்டைமானிடம் ஔவை தூது போதல்.
4. தொண்டைமான் ஔவைக்குத் தன் படைக்கருவிகளைக் காட்டுதல்.
5. அதியமானின் படைச்சிறப்பைத் தொண்டைமானிடம் ஔவை குறிப்பால் உணர்த்துதல்.
6. போர் வேண்டா என்று தொண்டைமான் முடிவு செய்தல்.